திருச்சி வருகை தந்த முதல்வர் மு.க.ஸ்டாலினுக்கு சிறப்பான வரவேற்பு!

அரியலூர், பெரம்பலூர் மாவட்ட நிகழ்ச்சிகளில் பங்கேற்பதற்காக நேற்றிரவு திருச்சிக்கு வருகை தந்த முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களுக்கு விமான நிலையத்தில் சிறப்பான வரவேற்பு அளிக்கப்பட்டது. இதில் அமைச்சர்கள் கே.என்.நேரு, அன்பில் மகேஷ் பொய்யாமொழி, எஸ். ரகுபதி, எஸ்.எஸ். சிவசங்கர், கோவி.செழியன், கழக துணைப் பொதுச் செயலாளர் ஆ.இராசா எம்.பி., கழக மாநிலங்களவை குழுத் தலைவர் திருச்சி சிவா மற்றும் மாவட்ட ஆட்சியர் மா.பிரதீப் குமார் மற்றும் மாவட்டச் செயலாளர்கள், அரசு அதிகாரிகள், கழக முன்னணியினர், பொதுமக்கள் திரண்டு வரவேற்றனர்.

தேர்தல் கால வாக்குறுதி நிறைவேறுகிறது!

திருவண்ணாமலையில் வளர்ச்சித் திட்டப் பணிகள்!

அமைச்சர் எ.வ.வேலு ஆய்வு செய்தார்!

திருவண்ணாமலை, நவ. 15 -

பொதுப்பணித்துறை, நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் எ.வ.வேலு (13-11- 2024) அன்று திருவண்ணாமலையில் வளர்ச்சி திட்டப் பணிகள் குறித்து ஆய்வு மேற்கொண்டார்கள். இந்நிகழ்வில் மாவட்ட ஆட்சித்தலைவர் தெ.பாஸ்கர பாண்டியன், திருவண்ணாமலை நாடாளுமன்ற உறுப்பினர் சி.என். அண்ணாதுரை, மாநில தடகளச் சங்கத் துணைத்தலைவர் மரு.எ.வ.வே.கம்பன் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

பொதுப்பணித் துறை, நெடுஞ்சாலைகள் மற்றும் சிறுதுறைமுகங்கள் துறை அமைச்சர் திருவண்ணாமலை ஊராட்சி ஒன்றியம், எடப்பாளையம் ஏரியில் புனரமைப்பு பணிகள் மற்றும் மேம்பாட்டு பணிகள் குறித்து ஆய்வு செய்தார்கள். எடப்பாளையம் ஏரியானது கடலூர் சித்தூர் சாலையில் கி.மீ 104/2ல் இடது புறத்தில் அமைந்துள்ளது. எடப்பாளையம் ஏரி சுமார் 26.02 ஹெக்டர் நிலப் பரப்பு உள்ளது. இந்த ஏரிக்கரைக்கு கரையாஞ்சட்டி ஏரிக் கரை மூலம் நீர்வரத்து வருகிறது. எடப்பாளையம் ஏரிக்கரையை புனரமைப்பு மற்றும் மேம்பாடு செய்யும் பொருட்டு பல்வேறு ராஜ்ய சபா உறுப்பினர்கள் நிதி மூலம் ஏரியில் வடக்கு, மேற்கு மற்றும் தெற்கு பகுதிகளில் ஏரிக்கரை அமைத்தல், தூர்வாருதல், சிறுபாலம் அமைத்தல், ஏரியின் கிழக்குப்பகுதியில் சிமெண்ட் பணி செய்தல், ஏரியினை தூர்வாருதல் மற்றும் சிமெண்ட் பணி செய்தல், ஏரியில் கி.மீ 0/1201ஃ550 வரை உள்ள நடைபாதைக்கு பேவர் பிளாக் அமைத்தல் மற்றும் கி.மீ 0/0 - 0/045 வரை பாதுகாப்புச் சுவர் அமைத்தல், வடக்கு மற்றும் கிழக்கு பகுதியில் வாகன நிறுத்துமிடம், குழந்தைகள் விளையாட்டு திடல், பெரியவர்கள் உடற்பயிற்சி மற்றும் கழிவறை வசதிகளுடன் அமைத்தல், ஏரியில் (3x2 box culvert) சிறுபாலம் அமைத்தல், கிழக்கு மற்றும் மேற்கு பகுதியில் தடுப்பு வேலி அமைத்தல் உள்ளிட்ட பணிகள் ரூ 7.25 கோடி மதிப்பீட்டில் நெடுஞ்சாலைத்துறை மூலம் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

நடைபாதை பாலம் அமைத்தல்!

மேலும், எடப்பாளையம் ஏரிக்கரையில் மேற்பரப்பில் புல்வெளி அமைத்தல் மற்றும் விளையாடும் பகுதி மேம்பாடு செய்தல், நடைபாதையில் நிலத்தை செப்பனிடுதல், ஏரியில் மீனவிளக்கு வசதி ஏற்படுத்துதல், ஏரியில் அமைக்கப்பட்டுள்ள தீவிற்கு பாதுகாப்பு சுவர் கி.மீ 0/045 - 0/120 வரை அமைத்தல், ஏரியில் அமைக்கப்பட்டுள்ள தீவிற்கு நடைபாதை பாலம் அமைத்தல் உள்ளிட்ட பணிகள் மேற்கொள்வது குறித்து பொதுப்பணித்துறை, நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் ஆய்வு மேற்கொண்டார்.

இதனை தொடர்ந்து, திருவண்ணாமலை மாநகராட்சிகுட்பட்ட சமுத்திரம் காலணியில் ரூ. 2 கோடியே 50 இலட்சம் மதிப்பீட்டில் நவீன சமுதாய கூடம் கட்டடம் கட்டுமான பணிகளை பார்வையிட்டு ஆய்வு செய்தார்கள். புதியதாக கட்டப்பட்டும் வரும் நவீன சமுதாய கூடம் கட்டடத்தில் தரைதளத்தில் நுழைவு கூடம், வரவேற்பு அறை, அலுவலகம், உணவு கூடம், சமையல் அறை, வைப்பறை, சமையல் எரிவாயு அறை, பொது கழிப்பறை உள்ளிட்ட வசதிகளுடன் 5569 சதுர அடி பரப்பளவில் அமையவுள்ளது.

விவசாயிகள் குறைதீர்க்கும் நாள்!

முதல் தளத்தில் மணமகன் அறை, மணமகள் அறை, திருமண கூடம், மின் தூக்கி உள்ளிட்ட வசதிகளுடன் 5325 சதுர அடி பரப்பளவில் அமைக்கப்படவுள்ளது. மேலும் சமுதாய கூடம் கட்டிடத்தில் முன்பகுதி சுற்றுசுவர் அமைத்தல், சுற்றிலும் அனுகு சாலை அமைத்தல், வடக்கு பகுதியில் கால்வாய் வசதி ஏற்படுத்துதல், மின்தூக்கி அமைத்து தருதல், சமையல் கூட பொருட்கள் வாங்குதல், உணவு அருந்தும் கூடம் மேசை மற்றும் நாற்காலி வாங்குதல், திருமண கூடம் இருக்கைகள் வாங்குதல் உள்ளிட்ட வைகள் குறித்து பொதுப்பணித்துறை, நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறை முகங்கள் துறை அமைச்சர் ஆய்வு செய்தார்கள்.

மேலும், திருவண்ணாமலை மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தில் ரூ. 12 கோடியே 17 இலட்சத்து 94 ஆயிரத்து 738 மதிப்பீட்டில் தரை தளமானது 13073 சதுர அடி பரப்பளவில் கூட்ட அரங்கம், ஒப்பனை அறை (ஆண்கள் மற்றும் பெண்கள்), ஏஜிP அறை, அலுவலக அறை, மின் அறை, மின் தூக்கி வசதி, பொது கழிப்பறை வசதிகளுடனும், இடைமட்ட தளமானது 2808 சதுர அடி பரப்பளவில் ஏஜிP அறை, அலுவலக அறை, மின் அறை, மின் தூக்கி வசதிகளுடன், தலா 10975 சதுர அடி பரப்பளவில் முதல் மற்றும் இரண்டாம் தளமானது கூடம், மின் அறை, மின் தூக்கி வசதி, கணினி அறை, வைப்பறை மற்றும் பொது கழிப்பறை வசதிகளுடன் கட்டப்பட்டு வரும் மக்கள் குறைதீர்வு நாள் கூட்டரங்கினை பொதுப்பணித்துறை, நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறை முகங்கள் துறை அமைச்சர் பார்வையிட்டு ஆய்வு செய்தார்கள்.

மாதந்தோறும் நடைபெறும் விவசாயிகள் குறைதீர்வு நாள் கூட்டம் மற்றும் ஒவ்வொரு வாரந்தோறும் நடைபெறும் மக்கள் குறைதீர்வு கூட்டத்தில் மக்கள் மனுக்களை எளிதில் வழங்கும் வகையில் அலுவலக கூட்டரங்கினை அமைத்திடவும், பணிகளை விரைந்து முடிக்கவும் பொதுப்பணித்துறை, நெடுஞ்சாலைகள் மற்றும் சிறுதுறைமுகங்கள் துறை அமைச்சர் எ.வ.வேலு அறிவுறுத்தினார்கள்.

இந்த ஆய்வின் போது பொதுப்பணித்துறை அமைச்சர் செய்தியாளர்கள் சந்திப்பில் தெரிவித்ததாவது :

முதலமைச்சர் வாழ்த்துக்களுடன் நான் 2000 ஆம் ஆண்டு தேர்தலில் நின்ற பொழுது திருவண்ணாமலை தெற்கு பகுதியில் இருக்கிற சமுத்திரம் காலனி அருகே வசிக்கிற மக்கள் திருமணங்கள் போன்ற நல்ல காரியம் செய்ய வேண்டும் என்று சொன்னால் இந்த பகுதியிலே ஒரு சமுதாயக்கூடம் இல்லை என்று கோரிக்கை வைத்தார்கள். ஆகவே கோரிக்கை வைத்த அந்த மக்களிடம் திராவிட மாடல் தலைமையிலான ஆட்சி நடத்துகின்ற வாய்ப்பை நீங்கள் தாருங்கள். இந்த திருமண கூடத்தை கட்டித் தருகிறேன் என்று சொன்ன அந்த அடிப்படையில் இன்றைக்கு சட்டமன்ற உறுப்பினர் நிதியில் இருந்து சமுதாய கூடம் கட்டப்படுகிறது. 250 பேர் உணவு கூடத்தில் அமர்ந்து உணவருந்துகிற வகையில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. சமையல் கூடத்தில் நவீன உபகரணங்களை பயன்படுத்தி ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. இது அந்த பகுதி மக்களுக்கு மிகவும் பயனுள்ளதாக அமையும். நீண்ட நாள் கோரிக்கை நிறைவேறவுள்ளது. இந்த பணியானது விரைவில் பயன்பாட்டிற்கு வரும்.

மேலும் வாரந்தோறும் திங்கட்கிழமை மாவட்ட ஆட்சித்தலைவரை பொதுமக்கள் பார்த்து மனு கொடுத்து தங்களுடைய தேவைகளை தீர்க்கிற நாள். இந்த நாளில் ஏராளமான பொதுமக்கள் தங்கள் மனுக்களை அளிப்பதற்காக காத்திருப்பார்கள். அதே நேரத்தில் இன்றைக்கு மக்கள் தொகை அதிகமாக கொண்டிருக்கிற ஒரு மாவட்டமாக திருவண்ணாமலை மாவட்டமாக இருக்கிறது. ஊராட்சிகளை கொண்டு இருக்கிற, விவசாயிகள் இருக்கிற மாவட்டம். ஆகவே திங்கள் கிழமை தோறும் நடைபெறும் மக்கள் குறைதீர்வு நாள் கூட்டத்திற்கு வருகை தரும் பொதுமக்களிடம் மனுக்களை பெற்றும், பொதுமக்களின் கூட்ட நெரிசலை தவிர்த்து அவர்களுக்கு முறையாக அலுவலர்கள் மூலமாக தீர்வு வழங்க வேண்டுமென்பதற்காவும் புதியதாக மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் குறைதீர்வு நாள் கூட்டரங்கம் கட்டப்பட்டு வருகிறது. இக்கட்டிடமானது மூன்று தளங்களில் அமைக்கப்படுகிறது. கீழ் தளத்தில் திங்கட்கிழமை அன்று பொதுமக்கள் அனைவரும் இங்கே அமர்ந்து தங்களுடைய குறைகளை மாவட்ட ஆட்சித்தலைவரிடத்திலோ, பிற அதிகாரிகளிடம் மனுக்களை கொடுத்து தீர்த்துக் கொள்கிறதற்கும், ஆயிரம் நபர்கள் ஒரே நேரத்தில் மனு கொடுக்கிற அளவிற்கு இந்த அரங்கமானது 36 ஆயிரத்து 831 சதுர அடி பரப்பளவில் அமைக்கப்படவுள்ளது.

மேலும் திராவிட மாடல் ஆட்சியினுடைய திட்டங்களை எல்லாம் மாவட்ட நிர்வாகத்தின் மூலமாக நிறைவேற்றுகின்ற பணியில் இருக்கிற காரணத்தினால் தமிழ்நாடு முதலமைச்சர் அரசின் சார்பாக இருக்கிற நிர்வாக அதிகாரி, தலைமைச் செயலாளர்கள் அல்லது அந்த துறை சம்பந்தப்பட்ட அமைச்சர் பெருமக்கள் காணொளி காட்சிகள் மூலமாக மாவட்ட ஆட்சியர் அவர்களை தொடர்பு கொண்டு திட்டங்களின் செயல்பாடுகள் குறித்து தொடர் ஆய்வு கூட்டங்களை காணொளி காட்சி மூலமாக நடத்தி வருகிறார்கள்.

ஆகவே காணொளி காட்சி மூலமாக கூட்டம் நடத்துவதற்கு மாவட்ட அளவிலான துறைச்சார்ந்த அலுவலர்கள் அனைவரும் ஒரே நேரத்தில் அமர்ந்து தமிழ்நாடு முதலமைச்சர் மற்றும் அமைச்சர் பெருமக்கள், அரசு உயர் அலுவலர்கள் தலைமைச் செயலகத்திலிருந்து காணொளிக் காட்சி மூலமாக கூறுகின்ற ஆலோசனைகள் மற்றும் அறிவுரைகளை கேட்கும் வகையில் நவீனமயமான பெரிய எல்இடி திரைகள் அமைக்கப்பட்ட கூட்டரங்கம் மேல்தளத்தில் அமைக்கப்படவுள்ளது.

பொதுப்பணித்துறை அமைச்சராக பணியாற்றக்கூடிய நான் தமிழ்நாடு முழுவதும் சுற்றுப்பயணம் செய்து ஒவ்வொரு கட்டடத்தையும் ஆய்வு செய்து குறிப்பிட்ட காலகட்டங்களிலே திறந்து வைக்கிற ஒரு வாய்ப்பு தமிழ்நாட்டு முதலமைச்சர் கொடுத்திருக்கிற பொழுது, நம்முடைய சொந்த ஊராக இருக்கிற இந்த ஊரில் இதை கட்டிக் கொண்டிருக்கிற காரணத்தினால் தரமாக கட்டப்படுகிறதா என்ற அடிப்படையில் ஆய்வு செய்வதற்காகத் தான் இந்த ஆய்வை மேற்கொண்டேன்.

இவ்வாறு அமைச்சர் எ.வ.வேலு தெரிவித்தார்.

பொதுப்பணித்துறை, நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் எ.வ.வேலு நேற்று (13.11.2024) திருவண்ணாமலை மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தில் கட்டப்பட்டும் வரும் மக்கள் குறைதீர்வு நாள் கூட்டரங்கினை பார்வையிட்டு ஆய்வு செய்தார்கள். இந்த ஆய்வில் மாவட்ட ஆட்சித்தலைவர் தெ.பாஸ்கர பாண்டியன், மாநில தடகளச் சங்கத்துணைத்தலைவர் மரு.எ.வ.வே.கம்பன், உள்ளாட்சி பிரதிநிதிகள் மற்றும் அரசு துறைச்சார்ந்த அலுவலர்கள் உடனிருந்தனர்.

துணை முதல்வர் பிறந்தநாள்: 662 இடங்களில் நல உதவிகள்!

கடலூர் மாவட்டத்திற்கு 24,25-ம் தேதிகளில் வருகைதரும்

துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலினுக்கு சிறப்பான வரவேற்பு!

கடலூர் கிழக்கு மாவட்டக் கூட்டத்தில் தீர்மானம்! அமைச்சர் எம்.ஆர்.கே. பன்னீர் செல்வம் அறிவிப்பு!

கடலூர்,நவ.15-

கடலூர் கிழக்கு மாவட்ட திமுக செயற்குழுக் கூட்டம் நேற்று 14.11.2024 வியாழக்கிழமை மாலை 4.30 மணியளவில் காட்டுமன்னார்கோயில் திமுக அலுவலகத்தில் கழக தேர்தல் பணிக்குழு செயலாளர் இள. புகழேந்தி தலைமையில், நடைப்பெற்ற கூட்டத்தில் வேளாண்மை மற்றும் உழவர் நலத்துறை அமைச்சர், கழக உயர்நிலை செயல்திட்டக்குழு உறுப்பினர், , கடலூர் கிழக்கு மாவட்ட செயலாளர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம், சிறப்புரையாற்றினார். மேலும் இக்கூட்டத்தில் திருவாளர்கள்:கடலூர் சட்டமன்ற உறுப்பினர் கோ.ஐய்யப்பன் , கழக பொறியாளர் அணி செயலாளர் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் துரை.கி.சரவணன், மாவட்ட துணை செயலாளர்கள் ஆ.ஞானமுத்து, ஆர்.சக்திவேல், சுதாசம்பத், ஒன்றிய செயலாளர்கள்: காட்டுமன்னார்கோயில் மேற்கு அ.முத்துசாமி, , திருமுட்டம் தெற்கு த.ங.ஆனந்தன், குறிஞ்சிப்பாடி வடக்கு அ.நாராயணசாமி, குமராட்சி கிழக்கு த.சங்கர், குமராட்சி வடக்கு வி.கோவிந்தசாமி, பரங்கிப்பேட்டை வடக்கு முத்து.பெருமாள் பரங்கிப்பேட்டை தெற்கு ஆர்.கலையரசன், கம்மாபுரம் மத்திய பி.சுந்தரபாண்டியன், கம்மாபுரம் தெற்கு கே.ஆர்.ராயர், கடலூர் கிழக்கு தெ.காசிராஜன், கடலூர் மேற்கு பி.சுப்பிரமணியன், கடலூர் வடக்கு கே.ஆர்.தனஞ்செயன், கடலூர் தெற்கு ஆர்.விஜயசுந்தரம்,

புவனகிரி கிழக்கு எம்.மனோகரன், கீரப்பாளையம் மேற்கு டி.திருமூர்த்தி, திருமுட்டம் வடக்கு எஸ்.செந்தில்குமார், திருமுட்டம் மேற்கு கே.ஆர்.கோவிந்தராஜ், காட்டுமன்னார்கோயில் கிழக்கு ஒன்றிய பொருளாளர் டி.ஜெயபாண்டியன், கடலூர் மாநகர செயலாளர்: கே.எஸ்.ராஜா, கடலூர் பகுதி செயலாளர்கள்: பா.வெங்கடேஷ், எஸ்.பி.நடராஜன், எஸ்.சலீம், மூ.இளையராஜா தலைமை செயற்குழு உறுப்பினர்கள்-,வ.ஞானசேகரன், வே.விக்ரமன் பொதுக்குழு உறுப்பினர்கள்: கே.பி.ஆர்.பாலமுருகன், ச.கல்யாணசுந்தரம், வி.பி.பாலு, எஸ்.பி.கண்ணன், மு.வெற்றிவேல், இரா.மஞ்சு, பேரூர் செயலாளர்கள்: காட்டுமன்னார்கோயில் எஸ்.கணேசமூர்த்தி, சேத்தியாதோப்பு ப.மனோகரன், வடலூர் வி.சிவக்குமார்,வடலூர் நகர கழக செயலாளர் தன. தமிழ்செல்வன் , திருமுட்டம் பூ.செல்வகுமார், அண்ணாமலை நகர் அ.க.பழனி, மாவட்ட கழக சார்பு அணிகளின் அமைப்பாளர்கள்: இளைஞரணி ஜி.கார்த்திகேயன், மாணவரணி அமைப்பாளர் அப்புசந்தியநாராயணன், மகளிர் அணி அமைப்பாளார் அமுதாராணி, மகளிர் தொண்டரணி எஸ்.மனோரஞ்சிதம், பொறியாளர் அணி அப்பு.சந்திரசேகர், ஆதிதிராவிடர் நலக்குழு ஆர்.பரந்தாமன், தகவல் தொழில்நுட்ப அணி ஏ.ஜாபர்அலி, மற்றும் இளைஞரணி மாவட்ட துணை அமைப்பாளர்கள்: ஏ.எம்.மதியழகன், வி.மணிகண்டன், குட்டிமணி(எ)ஜெகன் மற்றும் மாநகர அமைப்பாளர்: ஜெயமணி, மாநகர துணை அமைப்பாளர்: எ.ஜெயச்சந்திரன், உமாபதி, கோபி மற்றும் கழக முன்னோடிகள் மற்றும் கழக நிர்வாகிகள் கலந்துக் கொண்ட கூட்டத்தில் துணை முதலமைச்சர் கழக இளைஞரணி செயலாளர் உதயநிதிஸ்டாலின் கடலூர் மாவட்டத்திற்கு 24.11.2024 மற்றும் 25.11.2024 ஆகிய நாட்களில் ஆய்வு கூட்டம் , மற்றும் அரசு நிகழ்ச்சிகள், நலத்திட்ட உதவிகள் மற்றும் கழக சார்பு அணி நிர்வாகிகள் கூட்டத்திற்கு வருவதையொட்டி கடலூர் கிழக்கு மாவட்ட திமுக சார்பில் சிறப்பான வரவேற்பு அளிப்பதாகும்,

27.11.2024 அன்று துணை முதலமைச்சர் கழக இளைஞரணி செயலாளர் உதயநிதிஸ்டாலின் அவர்களின் பிறந்தநாளில் கடலூர் கிழக்கு மாவட்டத்தில் உள்ள 395 ஊராட்சி 267 வார்டு மொத்தம்-662 இடங்களில் கழக கொடியேற்றி இனிப்புகள் மற்றும் ,மரக்கன்றுகள் வழங்கியும், மாணவரணி சார்பாக தனித்திறன் பேச்சிபோட்டி ,விளையாட்டு போட்டி, மகளிரணி சார்பாக கோலப் போட்டி மற்றும் நலத்திட்ட உதவிகள் வழங்கி மிக சிறப்பாக நடத்த வேண்டும் என்றும்

16.11.2024 சனிக்கிழமை,17.11.2024 ஞாயிற்றுக்கிழமை மற்றும் 23.11.2024 சனிக்கிழமை, 24.11.2024 ஞாயிற்றுக்கிழமை ஆகிய நாட்களில் நடைபெற இருக்கும் வாக்குச்சாவடி முகாமில் பாக நிலை முகவர்கள் (BLA-2) மற்றும் பூத் கமிட்டி உறுப்பினர்கள் (BLC), கழக நிர்வாகிகள் மற்றும் உள்ளாட்சி பிரதநிதிகள் ஆகியோர் முகாமில் கலந்துக்கொண்டு புதிய வாக்காளர்களை சேர்த்தல் மற்றும் திருத்தம் பணிகளில் முழுமையாக ஈடுப்படுமாறு கேட்டு கொள்ளபட்டது.

இவ்வாறு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டது.

இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு நேற்று (14.11.2024) சென்னை, கே.கே.நகர், முத்து மாரியம்மன் திருக்கோயிலில் ரூ.32.75 லட்சம் மதிப்பீட்டில் இராஜகோபுர திருப்பணிக்கு அடிக்கல் நாட்டினார். உடன் பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் திருமதி பிரியா ராஜன், விருகம்பாக்கம் சட்டமன்ற உறுப்பினர் ஏ.எம்.வி.பிரபாகர் ராஜா, வேல்ஸ் பல்கலைக்கழக வேந்தர் ஐசரி கணேசன், திருக்கோயில் அறங்காவலரும் லண்டன் கிரைடன் துணை மேயருமான தாமோதரன் சீனிவாசன், அறங்காவலர் ஜெயசேகரன் சீனிவாசன், சென்னை மண்டல இணை ஆணையர் திருமதி கி.ரேணுகாதேவி, மாமன்ற உறுப்பினர் க.தனசேகரன் மற்றும் அலுவலர்கள் உள்ளனர்.

கூட்டுறவுத்துறை அமைச்சர் கேஆர்.பெரியகருப்பன் , சிவகங்கை மாவட்டத்தில் 71-வது அனைத்திந்திய கூட்டுறவு வார விழா-2024-ஐ முன்னிட்டு, சிவகங்கையிலுள்ள மண்டல இணைப்பதிவாளர் அலுவலக வளாகத்தில், நேற்று (14.11.2024) மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி ஆஷா அஜித், தலைமையில் கூட்டுறவு கொடியினை ஏற்றி வைத்து, மரக்கன்றுகள் நடும் நிகழ்வினை துவக்கி வைத்தார். உடன் மானாமதுரை சட்டமன்ற உறுப்பினர் திருமதி ஆ.தமிழரசி ரவிக்குமார் , கூட்டுறவு சங்கங்களின் இணைப்பதிவாளர் இராஜேந்திர பிரசாத், மேலாண்மை இயக்குநர் (மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கி) திருமதி உமா மகேஸ்வரி, சிவகங்கை ஊராட்சி ஒன்றியக்குழு தலைவர் திருமதி மஞ்சுளா பாலசந்தர், திருப்பத்தூர் பேரூராட்சி தலைவர் திருமதி கோகிலாராணி நாராயணன், துணை பதிவாளர்கள் மற்றும் கூட்டுறவு சங்கங்களின் உறுப்பினர்கள் மற்றும் அலுவலக பணியாளர்கள் உட்பட பலர் உள்ளனர்.